# குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
# பெருமாள் திருமொழி

## பத்தாம் திருமொழி - அங்கணெடு மதிள்
## ஸ்ரீராமாயண கதைச் சுருக்கம் - திருச்சித்ரகூடம்

** அங்கணெடுமதிள் புடை சூழ் அயோத்தி என்னும் *
அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும் சோதி *
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி *
விண்முழுதும் உய்யக் கொண்ட வீரன் தன்னை **
செங்கண் நெடுங்கருமுகிலை இராமன் தன்னைத் *
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
எங்கள் தனி முதல்வனை எம்பெருமான் தன்னை *
என்று கொலோ! கண் குளிரக் காணு நாளே 1

வந்தெதிர்ந்த தாடகை தன் உரத்தைக் கீறி *
வருகுருதி பொழி தர வன்கணை ஒன்றேவி *
மந்திரங்கொள் மறை முனிவன் வேள்வி காத்து *
வல்லரக்கர் உயிருண்ட மைந்தன் காண்மின் **
செந்தளிர்வாய் மலர் நகை சேர் செழுந்தண் சோலைத் *
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த *
அணிமணி ஆசனத்திருந்த அம்மான் தானே 2

செவ்வரி நற்கருநெடுங்கண் சீதைக்காகிச் *
சின விடையோன் சிலை இறுத்து மழுவாள் ஏந்தி *
வெவ்வரி நற்சிலை வாங்கி வென்றி கொண்டு *
வேல்வேந்தர் பகை தடிந்த வீரன் தன்னை **
தெவ்வர் அஞ்சு நெடும் புரிசை உயர்ந்த பாங்கர்த் *
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
எவ்வரு வெஞ்சிலைத் தடக்கை இராமன் தன்னை *
இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே 3

தொத்தலர் பூஞ்சுரிகுழல் கைகேசி சொல்லால் *
தொன்னகரம் துறந்து துறைக் கங்கை தன்னை *
பத்தியுடைக் குகன் கடத்த வனம் போய்ப் புக்குப் *
பரதனுக்குப் பாதுகமும் அரசும் ஈந்து **
சித்திரகூடத்திருந்தான் தன்னை * இன்று
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
எத்தனையும் கண்குளிரக் காணப் பெற்ற *
இருநிலத்தார்க்கு இமையவர் நேர் ஒவ்வார் தாமே 4

வலி வணக்கு வரை நெடுந்தோள் விராதைக் கொன்று *
வண்தமிழ் மாமுனி கொடுத்த வரிவில் வாங்கி *
கலை வணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கிக் *
கரனோடு தூடணன் தன் உயிரை வாங்கி **
சிலை வணக்கி மான் மறிய எய்தான் தன்னைத் *
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
தலை வணக்கிக் கை கூப்பி ஏத்த வல்லார்
திரிதலால் * தவமுடைத்தித்தரணி தானே 5

தனமருவு வைதேகி பிரியல் உற்றுத் *
தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத்தேற்றி *
வனமருவு கவி அரசன் காதல் கொண்டு *
வாலியைக் கொன்று இலங்கை நகர் அரக்கர் கோமான் **
சினம் அடங்க மாருதியால் சுடுவித்தானைத் *
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
இனிதமர்ந்த அம்மானை இராமன் தன்னை *
ஏத்துவார் இணையடியே ஏத்தினேனே 6

குரை கடலை அடலம்பால் மறுகவெய்து *
குலை கட்டி மறுகரையை அதனால் ஏறி *
எரி நெடுவேல் அரக்கரொடும் இலங்கை வேந்தன் *
இன்னுயிர் கொண்டவன் தம்பிக்கரசும் ஈந்து **
திருமகளோடு இனிதமர்ந்த செல்வன் தன்னைத் *
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
அரசமர்ந்தான் அடி சூடும் அரசை அல்லால் *
அரசாக எண்ணேன் மற்றரசு தானே 7

அம்பொனெடு மணிமாட அயோத்தி எய்தி *
அரசெய்தி அகத்தியன் வாய்த் தான் முன் கொன்றான்
தன் * பெருந்தொல் கதை கேட்டு மிதிலைச் செல்வி *
உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள் **
செம்பவளத் திரள்வாய்த் தன் சரிதை கேட்டான் *
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
எம்பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால்
பருகுவோம் * இன்னமுதம் மதியோம் அன்றே 8

செறிதவச் சம்புகன் தன்னைச் சென்று கொன்று *
செழுமறையோன் உயிர் மீட்டுத் தவத்தோன் ஈந்த *
நிறை மணிப் பூண் அணியும் கொண்டு இலவணன் தன்னைத் *
தம்பியால் வான் ஏற்றி முனிவன் வேண்ட **
திறல் விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான் தன்னைத் *
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
உறைவானை மறவாத உள்ளம் தன்னை
உடையோம் * மற்றுறு துயரம் அடையோம் அன்றே 9

** அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி *
அடல் அரவப் பகை ஏறி அசுரர் தம்மை
வென்று * இலங்கு மணி நெடுந்தோள் நான்கும் தோன்ற *
விண் முழுதும் எதிர் வரத் தன் தாமம் மேவி **
சென்றினிது வீற்றிருந்த அம்மான் தன்னைத் *
தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
என்றும் நின்றான் அவன் இவன் என்றேத்தி * நாளும்
இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொன்டீர்! நீரே 10

** தில்லை நகர்த் திருச்சித்ரகூடம் தன்னுள் *
திறல் விளங்கு மாருதியோடமர்ந்தான் தன்னை *
எல்லை இல் சீர்த் தயரதன் தன் மகனாய்த் தோன்றிற்றது
முதலாத் * தன் உலகம் புக்கதீறா **
கொல்லியலும் படைத் தானைக் கொற்ற ஒள்வாள் *
கோழியர் கோன் குடைக் குலசேகரன் சொற் செய்த *
நல்லியல் இன்தமிழ் மாலை பத்தும் வல்லார் *
நலம் திகழ் நாரணன் அடிக் கீழ் நண்ணுவாரே 11

**குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்**

---